இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30.07.2026

# முதல் குரல் எழுப்பிய கலைஞரும் தொடர் போராட்டம் நடத்திய தலைவரும் - (2)

**“தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை, நுழைவுத் தேர்வு எந்த வடிவத்தில் வந்தாலும்; அதை எதிர்க்கும்!” என்று தலைவர் கலைஞர் காட்டிய வழியில் நடந்தார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

தலைவர் கலைஞர் அவர்கள் மாநில அளவில் நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வுகளை, 2007 ஆம் ஆண்டு அகற்றி, அதற்காகத் தனிச் சட்டம் இயற்றினார்கள். அச்சட்டத்திற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் ஏழை எளிய கிராமப்புற மாணவர்களின் நலன் காக்கப்படுவதை உறுதி செய்தார். இதன் அடிப்படையில் தான், பல ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே மருத்துவ மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்று, திறன்மிக்க நம் மாணவர்களுக்கு மருத்துவக்கல்வி பயிலக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது.

ஆனால் **ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட ‘நீட்’ தேர்வுக்கான திருத்தச் சட்டம், அதன் பிறகு கொண்டு வரப்பட்ட தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஆகியவை மருத்துவ மாணவர் சேர்க்கையில் ‘நீட்’ தேர்வைக் கொண்டு வந்தது. இது நமது மாணவர்களை வெகுவாக பாதித்தது. எனவே, இதனை தி.மு.கழகம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.**

2016 முதல் தி.மு.க. தனது எதிர்ப்பை பதிவு செய்து வந்தாலும் 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் மாபெரும் சட்டப் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

‘நீட்’ தேர்வால் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட ஓய்வு பெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. இராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். 10.06.2021 அன்று இந்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம் பெற்று இருந்தார்கள். பொதுமக்கள் அனைவரிடமிருந்தும் கருத்துக்களை இக்குழு கேட்டுப் பெற்றது. 86 ஆயிரத்து 342 பேர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்து இருந்தார்கள். இந்தக் கருத்துகளை ஆராய்ந்து, தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே.இராஜன் குழு 14.07.2021 அன்று அரசுக்கு அளித்தது.

**‘நீட்’ தேர்வை ரத்து செய்யும் சட்டம் கொண்டு வரலாம் என இக்குழு பரிந்துரை செய்தது. 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார்கல்வி நிறுவனங்களில் சேர்க்கைச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/2007) போன்றதொரு சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி அதற்காகக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்தது.**

இந்த உயர்மட்டக் குழு அளித்த விரிவான பரிந்துரைகளைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அரசு செயலாளர்களைக் கொண்ட குழு ஒன்று 15.07.2021 அன்று அமைக்கப்பட்டது. செயலாளர்கள் குழுவும் ‘நீட்’ விலக்குச் சட்டத்தை உருவாக்க பரிந்துரை செய்தது. இதன் தொடர்ச்சியாக ‘நீட்’ தேர்வை ரத்து செய்யும் சட்டத்தை 13.9.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்தார்.

மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய இளநிலை மருத்துவக் கல்விச் சேர்க்கைகளை, இனிமேல் 12ஆம் வகுப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்துவதற்கு ஏதுவாக இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்கு **“தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்ட முன்வடிவு 2021”** என்ற பெயர்.

அப்படி நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மாநில ஆளுநருக்கு அனுப்பி வைத்தார் முதலமைச்சர். ஆளுநர் அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் வைத்திருந்தார். 27.11.2021 அன்று நேரில் சென்று ஆளுநரிடம் முதலமைச்சர் வலியுறுத்தினார். 28.12.2021 அன்று அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் புதுடெல்லி சென்று குடியரசுத் தலைவர் அவர்களைச் சந்தித்து மனு அளிக்க ஏற்பாடு செய்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டினார்.

17.1.2022 அன்று நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் எம்.பி.க்கள் குழு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியது. இவ்வளவுக்குப் பிறகும் ஆளுநர் அசைந்து கொடுக்கவில்லை. 1.2.2022 அன்று அதனைத் திருப்பி அனுப்பினார் ஆளுநர்.

உடனடியாக 05.02.2022 அன்று சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி சட்டமுன்வடிவு மீண்டும் 08.02.2022 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஆளுநருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. பிரதமரைச் சந்தித்தும் முதலமைச்சர் வலியுறுத்தினார்கள்.

**இது குறித்து, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை - ஆயுஷ்துறை - உள் துறை - உயர்கல்வித் துறை என பல்வேறு அமைச்சகங்கள் கோரிய அனைத்து விளக்கங்களுக்கும் தமிழ்நாடு அரசு உடனுக்குடன் உரிய விளக்கங்களையும் வழங்கியது. அதன்பிறகும் சட்டத்துக்கு ஒப்புதலை வழங்க ஒன்றிய பா.ஜ.க. அரசு மறுத்துவிட்டது. இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இப்படி தொடர்ச்சியாக சட்டப்போராட்டத்தை நடத்தியவர்தான் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**இன்றைக்கு ‘நீட்’ விலக்குப் போராட்டம் இந்தியா முழுமைக்கும் பற்றி எரிகிறது என்றால் அதற்கு பத்தாண்டு காலமாக அடித்தளம் அமைத்து அந்த நெருப்பை அணையாமல் காத்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.**



தமிழ்நாடு சட்டப் பேரவையில் பட்ஜெட் தாக்கல் கூட்டம், ஆகஸ்ட் 5ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தை காணொலி வாயிலாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தினார். இதில் தலைவர் அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழ்நாடு நலன் சார்ந்து கழக சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் ஆற்ற வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்துப் பல்வேறு கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

## தமிழ்நாட்டுப் பல்கலையில்

# தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மூன்றாம் இடம்!

## ‘வலைதளப்’ பதிவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**புதுடெல்லி, ஜூலை 30-**

**நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாகப் பாடப்பட்டு தமிழ் அவமானப்படுத்தப்பட்ட வேதனையான நிகழ்வு நடந்தேறியது.**

இதனை அடுத்து ‘ட்விட்டரில்’ பதிவொன்று வெளியிட்ட கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், “வாய் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா? என்று கேட்டவர், இப்போது இதைக் கண்டித்து ஏதாவது பேசுவாரா?” என வினவியுள்ளார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

**முதன்முறையாக தமிழ்நாடு பல்கலைக்கழகம் ஒன்றில், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு, வந்தே மாதரம் பாடலுடன் பட்டமளிப்பு விழா தொடங்கியுள்ளது.**

**வாய் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா என்று கேட்டவர், இப்போது இதைக் கண்டித்து எதாவது பேசுவாரா?**

இவ்வாறு அப்பதிவில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# என் தொகுதிக்குள்ள யாராவது காலை வச்சா கொன்னுடுவேன்!

## த.வெ.க. நிர்வாகிக்கு பெண் அமைச்சர் பகிரங்க மிரட்டல்!

**ராஜபாளையம், ஜூலை 30-**

**தூக்கி ஜட்டியோட வச்சு அடிச்சு, கொன்னு வெளியே எடுத்துருவேன் என த.வெ.க . நிர்வாகிக்கு அமைச்சர் ஜெகதீஸ்வரி மிரட்டல் விடுக்கும் ஆடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சராகவும், மாவட்டப் பொறுப்பு அமைச்சராகவும் இருக்கிறார். இவர், சாத்தூர் தவெக வடக்கு ஒன்றியச் செயலாளர் ராஜகுருவிடம், ராஜபாளையம் தென்கிழக்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணன் குறித்து தொலைபேசியில் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி எச்சரித்து பேசிய ஆடியோ, தற்போதுசமூகவலைதளங்களில் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆடியோ உரையாடல் வருமாறு:-

**ராஜகுரு:** அம்மா வணக்கம், சொல்லுங்கம்மா.

**அமைச்சர்:** ஒரு விஷயம் கேட்கலாம்னு கால் பண்ணேன். தாசில்தார் ஆபிஸ்ல போயி ஒரு ஆபிசர பார்த்தீங்களோ?

**ராஜகுரு:** நான் போகலம்மா. லட்சுமணன் போயிருக்காம்மா

**அமைச்சர்:** லட்சுமணனா, என்ன சொன்னாப்ல?

**ராஜகுரு:** டிஎஸ்பி ஆபிஸ் போயிருக்கான். எல்லா ஆபிஸ்க்கும் போயிருக்கான். லட்டர் கொடுத்திருக்கான்.

**அமைச்சர்:** எந்த லெட்டர் கொடுத்திருக்காராம்?

**அவர்:** இல்லம்மா... லட்டு.. லட்டு..

**அமைச்சர்:** ராஜபாளையத்துல வந்து லட்சுமணன் லட்டு கொடுக்கிறதுக்கு, தாசில்தார் ஆபீஸ் போறதுக்கு யார் அவருக்கு அதிகாரம் கொடுத்தா? தாசில்தார் இங்க வந்து எப்படி பேசுறது? சாத்தூர்காரர் இங்க வந்து என்ன பேசுறது?

**ராஜகுரு:** அம்மா நான் யூனியன் ஆபிஸ்ல கான்ட்ராக்ட் வேலை பார்க்கிறேன். அப்போ பிடிஓ என்கிட்ட அம்மா எப்ப வர்றாங்கன்னு கேட்டார். நான் கேட்டு சொல்றேன் அப்படிங்கிறதோட முடிச்சுக்கிட்டேன். அப்பதான் சொன்னாரு, யாரோ ஒன்றிய செயலாளர் சொல்லி லட்சுமணன் வந்தாங்க என்றார். அப்ப நான், அண்ணாச்சி யாரா இருந்தாலும், அந்தம்மா தான் தொகுதி எம்எல்ஏ, அவங்க தான் மாவட்ட செயலாளர். எதுவா இருந்தாலும், நாங்க அந்தம்மாகிட்ட சொல்லிருவோம். அந்தம்மா உங்க கிட்ட பேசுவாங்க சார். அப்படினு சொல்லி முடிச்சிருக்குமா.

**அமைச்சர்:** நீங்க லட்சுமணன்கிட்ட போன் பண்ணி சொல்லிடுங்க. நான் லட்சுமணன் மேல கம்ப்ளைண்ட் எழுதிக்கொடுத்து உள்ள வச்சுபுடுவேன்.

**ராஜகுரு:** அம்மா உங்களுக்கு தெரியும்ல.

**அமைச்சர்:** என்னைய ஆரம்பத்தில் இருந்தே சீண்டிக்கிட்டு இருக்காப்ல. ஏற்கனவே, பொதுச் செயலாளர் 5 மாதத்திற்கு முன்பேதிட்டினார். திரும்ப, திரும்ப என்ன செய்றார். என்னைய பார்த்தா எப்படி தெரியுது. என் தொகுதிக்குள்ள வந்து அதிகாரம் பண்ண யார் அதிகாரம் கொடுத்தா. என் தொகுதிக்குள்ள எப்படி அந்த பையன் வருவான்.

**ராஜகுரு:** இல்லம்மா, நீங்க 15ம் தேதி வருவீங்கள்ளம்மா, பிடிஓகிட்ட எதுவா இருந்தாலும் அந்தம்மாதான்னு சொல்லிட்டோம். அவங்க உங்க கிட்ட பேசுவாங்க.

**அமைச்சர்:** நீங்க அந்த பையன்கிட்ட பேசுவீங்களா, நம்பர் வச்சுருங்கீங்களா, கொஞ்சம் கொடுத்து உதவி பண்ணுங்க, நம்பர் கொடுங்க.

**ராஜகுரு:** அம்மா நாங்க கீரியும், பாம்புமா இருக்கோம்மா.

**அமைச்சர்:** வாட்ஸ்அப்ல நம்பர் போடுங்க.

**ராஜகுரு:** உங்களுக்கு அதிகாரம் இருக்கு. கூப்பிட்டு சத்தம் போடுங்க.

**அமைச்சர்:** நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். நான் தூக்கி வச்சு, ஜட்டியோட வச்சு அடிச்சு கொன்னு, வெளிய எடுத்துருவேன். ரிப்போர்ட்டரா இருக்கும் போதே இவன்... என்ன பார்க்கும் போது என்ன பைத்தியக்காரன் மாதிரி இருக்கா அவனுக்கு? அண்ணாச்சி, ஒரேயொரு விஷயம் தெளிவா சொல்றேன். என் தொகுதிக்குள் சாத்தூர் தொகுதிக்காரங்க கால கூட வைக்க விடமாட்டேன். அதை மட்டும் தெளிவா சொல்லிடுங்க. உள்ள ஒருத்தனும் கால வைக்கக் கூடாது. வச்சா உடனே ஆக்ஷன் எடுப்பேன். ஏற்கனவே போலீஸ்கிட்ட சொல்லி, அங்க சுத்தி விட்டுகிட்டுதான் வச்சுருக்கேன். இருங்க ஊருக்கு வந்துக்கிறேன்.

இவ்வாறு அந்த ஆடியோ முடிகிறது.

த,வெ,க, சாத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ராஜகுருவுடன், பெண் அமைச்சர் ஜெகதீஸ்வரி பேசும் ஆடியோ வெளியானதையடுத்தே அவர் நீக்கப்பட்டு உள்ளதாகவும், ஆனால் அவர் மீது தொடர் சர்ச்சைகள் எழுந்த நிலையில், கடந்த 21ம் தேதியே கட்சியில் இருந்தே ராஜகுருவை விருதுநகர் மாவட்டச் செயலாளர் சின்னப்பர் தற்காலிகமாக நீக்கிவிட்டதாக தற்போது அறிக்கை வெளியாகி உள்ளது. இதேபோல அமைச்சர் ஜெகதீஸ்வரி மீதும் மற்றொரு பெண் அமைச்சர் கீர்த்தனாவுடன் தகராறில் ஈடுபட்டதும், தனது பெயரை பேனரில் 2வதாக போட்டதற்காக கலெக்டரிடம் மேடையிலேயே தகராறு செய்ததும், பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய ராக்கெட் ராஜாவுடன் படம் வந்தது என பல்வேறு புகார்கள் வெளியான நிலையில் தற்போது சொந்த கட்சி நிர்வாகிக்கே கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நன்றி :
**‘தினகரன்’** 28,07,2026